1975 எப்ரல் 10]

கருத்துக்கள் சொல்கிற எதிர்க்கட்சி பத்திரிகைகளையும் அனுமதிக்க வேண்டும். சில பால் பண்பு ஊட்டுகின்ற பத்திரிகைகள் ஜெயில் கைதிகளுக்கு அனுமதித்தால் மிகவும் சிரமப்படுவார்கள். குடும்பம் இல்லாமல் தனியாக இருக்கிறார்கள். இத்தகைய பத்திரிகைகள் தடை செய்யப்படுமா? அரசியல் கருத்துக்கள் உள்ள பத்திரிகைகள் அனுமதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசியல் கருத்துக்களைத் தடுக்கக் கூடாது. அரசியல் கருத்துக்கள் சம்பந்தப்பட்ட பத்திரிகைகளை வாங்க விரும்பினால் சொந்த செலவில் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்று ஏற்கனவே சொல்லி விட்டேன். வேறு பத்திரிகைகளைப்பற்றிச் சொன்னார்கள். அதிலே அதிக விவரம் தெரியாது. நிச்சயம் அப்படிப்பட்ட நிலை சிறையில் இருப்பதாகத் தெரியவில்லை.

தமிழில் எழுதப்பட்ட பட்டைகள்.

***623** வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாவட்ட நீதிமன்றங்களில் உள்ள (பியூன்) ஊழியர்கள் அணிந்திருக்கிற பட்டைகளில் உள்ள வார்த்தைகள் ஆங்கிலத்தில் சொல்லப்பட்டு எழுத்து வடிவில் தமிழில் உள்ளவற்றை மாற்றி தூய தமிழில் எழுதும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தமிழ்நாடு அரசின் கடைநிலை ஊழியர்களுக்குத் தமிழில் எழுதப்பட்ட பட்டைகள் வழங்கிட அரசு ஆணை பிறப்பித்து விட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி : கோர்ட்டிலே, பொதுவாக ஆபீசிலே பியூன்கள் டவாலி போட்டுக் கொள்கிறார்கள். பழைய பிரிட்டிஷ் காலத்தில் இருந்த வழக்கத்தை மாற்றி அவர்களுக்கு புது தமிழில் எழுதப்பட்ட பட்டைகள் வழங்க குறிப்பு ஏதாவது உண்டா அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உயர்நீதி மன்றத்துக்கு கருத்துக்களை அனுப்பினால் அவர்கள் பரிந்துரையைக் கேட்டு, அப்படிப்பட்ட கோரிக்கை கவனிக்க செய்யலாம்.

Meeting of Southern Regional Electricity Board.

***531 Q.—Thiru N.K. PALANISAMY** : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state :—

(*a*) whether a meeting of the Southern Regional Electricity Board was held in Bangalore on 21st June 1974 ;

(b) whether the Chairman of the Tamil Nadu Electricity Board participated in the meeting; and

(c) if so, the decisions taken at the meeting?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ): ஆம்.

(உ) தென்பிராந்தியத்தில் மின்சக்தி உற்பத்தித்திட்டங்கள் அனைத்தையும் பிராந்திய அடிப்படையில் முழுமையாக ஆய்வு செய்யும் பணியை தென் பிராந்திய மின் வாரியம் மேற்கொள்ள வேண்டும் என்று பெங்களூரில் **21-6-74** அன்று நடைபெற்ற தென் பிராந்திய மின் வாரியத்தின் **35**-வது கூட்டத்தில் தமிழ்நாடு மின் வாரியத் தலைவர் வலியுறுத்தினார். இக்கருத்துக்கு நல்ல ஆதரவு இருந்தது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு மாநிலத்திலும் தேவைப் படும் மின் சக்தி, மின் உற்பத்தி, எஞ்சிய மின் சக்தி ஆகியவற்றைக் கணக்கிடும் பொறிமூலம் கணக்கிடுவது என்றும், அந்தந்த வட்டாரத்தில் உள்ள பல்வேறு புனல் மின் உற்பத்தி நிலையங்களை உரிய அளவுக்குப் பயன்படுத்திக்கொள் வதற்கான சிறப்பு ஆய்வுகளை மேற்கொள்வதெனவும் முடிவு செய்யப் பட்டது.

திரு. என். கே. பழனிசாமி: சார், நம் சர்க்கார் சார்பில் நம் மாநிலத் திற்கு வேண்டிய மின் உற்பத்தித் திட்டம் ஏதாவது கொடுத்து இருக்கிறார் களா? அப்படியானால் ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய சர்க்கார் அதற்கு ஏதாவது உதவி கொடுப்பதாகச் சொல்லி இருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்தக் கேள்வியைப் பொறுத்த வரையில் நம்முடைய மின் வாரியத் தலைவர் என்ன கருத்து சொன்னார் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தென் மாநிலத்தில் உள்ள மின் வாரியத் திட்டம் பற்றி முழுமையாகப் பரிசீலிக்க வேண்டுமென்று வற்புறுத்தினால் அது பற்றி கருத்துச் சொல்லப்படும்.

THIRU B. VENKATASWAMY: May I know from the Hon. Minister whether the Hogenakal Project will be commissioned, whether this matter was discussed in this meeting and whether it is going to be commissioned shortly?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அது பற்றித் தனியாக எதுவும் இல்லை. தென் மாநில திட்டம் பற்றி ஆராய வேண்டுமென்று தெரிவித்து இருக்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு காமன் க்ரிட் வேண்டுமென்ற ஒரு கருத்து இருந்ததே, அது சம்பந்தமாக பேசி ஏதாவது முடிவு ஏற்பட்டதா? அப்படி இருந்தால், அதன் விவரம் அமைச்சர் தெரிவிப்பாரா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதன் விவரம் என்னிடம் இப்போது இல்லை.

It was decided to computerize the load generation balance in the constituent States for each month of the Fifth Five Year Plan Tamil Nadu Electricity Board has spared the services of an Engineer to assist the Southern Regional Electricity Board in the studies.

புதிய சர்க்கரை ஆலைகள்

*532 வினா: திரு. மே. சி. தூயமணி; மாண்புமிகு தொழில் மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மேட்டுப்பாளையம் தொகுதி காரமடை பிளிச்சியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவும் ஆக்கப்பணி எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கோயம்புத்தூர் மாவட்டத்தில் நிறுவ இருக்கும் சர்க்கரை தொழிற்சாலையை எந்த இடத்தில் நிறுவுவது என்பது இன்னும் அரசின் ஆய்வில்தான் உள்ளது. இதுபற்றி இறுதி முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை.

திரு. கோவை செழியன் : பேரவை தலைவர் அவர்களே, ஒரு புதிய சர்க்கரை ஆலை அமைக்க வேண்டுமென்று சொன்னால் இந்த ஆலைக்கு இவ்வளவு கரும்பு நிரந்தரமாக வரவேண்டும் என்று இருக்கிறது. ஆனால் கோயம்புத்தூரைப் பொறுத்த வரையில் சோர்ஸ் ஆப் இரிகேஷன் இருக்க வேண்டும். எந்த சோர்ஸ் இல்லாமல் மழையை நம்பி இருக்க வேண்டு மென்று நிலை இருக்கிறது என்று கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஸ்டாடிஸ்டிகல் டிபார்ட்மெண்டில் ஒரு அறிக்கை விட்டிருக்கிறார்கள். இந்த அறிக்கையில் இந்த மாதிரியான சாத்தியக் கூறு இல்லை, பெய்ல்யூர் ஆகும் என்று சொல்லியிருக்கிறார்களே.இந்தமாதிரி ஆலையை கொடுமுடியில் கொண்டுவர ஏற்பாடு செய்தால் நஷ்டம் ஏற்படும் என்று அரசாங்கம் அறி யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கீழ்க்கண்ட காரணத்தால் கோயம்புத்தூர் பாலக்காடு சாலையிலிருந்து தெற்கில் 5 மைல் தொலைவில் உள்ள குனியமுத்தூர் கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டது. குனியமுத்தூரைச் சுற்றி 30 மைல் தொலைவில் கரும்பு சாகுபடி செய்யும் பரப்பளவு சுமார் 27,000 எக்கராவாக இருக்கும். ஆனால் இப்பரப்பு காரமடையைச் சுற்றி 19,000 எக்கராக இருக்கும். ஆகவே குனியமுத்தூருக்கு 50 சதவீதம் கரும்பு சாகுபடி பரப்பு அதிகமாக இருக்கும். பொள்ளாச்சி வட்டத்தில்